**அ.வ.எண். 142 /2018**

நாள். 08.08.2025

பெயர் சுசேந்திரன் க/பெ அண்ணாமலைகவுண்டர்

வாதி தரப்பு 1-ம் சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை (தொடர்ச்சி)**

1) தாவா சொத்தை பிரதிவாதி ஆக்கிரமித்ததாக சொல்லி ஊர் மக்கள் முன் பேசியதாக சொல்லியுள்ளேன் அவர்களின் பெயர் தெரியுமா என்றால் தெரியும், சரவணகவுண்டர், சின்னப்பகவுண்டர், சித்தன் செட்டியார், மற்றும் அவர்களுடைய பங்காளிகள் இருந்தார்கள். மேற்படி நபர்கள் இப்போது உயிருடன் இருக்கிறார்களா என்றால் சித்தன் செட்டியார் உயிருடன் இருக்கிறார். 1974 ம் ஆண்டு யார் யாருக்கு தாவா சொத்து பாகம் பிரிகிறது என்றால் எனக்கும், என் அக்காவிற்கும் பிரிகிறது. தாவா சொத்து பாகம் பிரித்து கொடுத்ததிலிருந்து தற்போது வரை அதே அளவில் தான் ஓட்டிவருகிறோமா என்றால் இல்லை பிரித்து கொடுத்துவிட்டோம். தாவா சொத்தை த விர வேறு நிலங்கள் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை.

2) தாவா சொத்து பாகம் பிரித்த பின்பு பிரதிவாதி எவ்வாறு 30 சென்ட் நிலத்தை ஓட்டி வருகிறார் என்று சொல்கிறேன் என்றால் அது பக்கத்து நிலம் ஆகும். எத்தனை வருடமாக பிரதிவாதி 30 சென்ட் நிலத்தை ஓட்டி வருகிறார் என்றால் 7 அல்லது 8 வருடங்களாக ஓட்டி வருகிறார். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 7 அல்லது 8 வருடங்களாக ஓட்டி வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதி ஈனவிலைக்கு என் நிலத்தை கேட்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எவ்வளவு விலைக்கு கேட்டார் என்றால் கொடுப்பாரா என்று கேட்டார்கள் ரூபாய்க்கு கேட்கவில்லை.

3) எனது வழக்குரையில் அரசாங்க மூட்டுகளை பிடுங்கி வரப்புகளை பிரதிவாதி வெட்டியுள்ளதாக சொல்லியுள்ளேன் அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஊர்பொதுமக்கள் தாவா சொத்தை அளவீடு செய்யும்போது இருந்தார்களா என்றால் இருந்தார்கள். பிரதிவாதி தாவா சொத்தை அளப்பதற்கு ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல, பிரதிவாதிகள் ஆட்சேபித்தார்கள். நான் பிரதிவாதியை பழிவாங்கவேண்டும் என்ற நோக்கத்தில் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

Sd/- Tmt.S.Sri Mathura, LL.M.,
District Munsif
Harur.